**ரத்தோட்டைபிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ரத்தோட்டைபிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் ˙ 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரத்தோட்டைபிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் ˙ தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் ˙ தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை

வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 86,687 ஆன நூலகப் புத்தகங்கள் மூலதன வருமானம் மற்றும் மூலதன செலவின் கீழ் கணக்கு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டின் கணக்கின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான கடை வாடகை பட்டியலிடல் வருமானம் ரூபா 4,363,800 ஆக இருந்த போதும் அது ரூபா 4,609,027 என ரூபா 245,227 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | குறித்த தொகையை நாட்குறிப்பு பதிவு மூலம் சீராக்கம் செய்வதாக | வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2. இணங்காதகட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் காணப்படும் 06 கணக்கு விடயங்களுக்குரிய் மீதிகள் மற்றும்அவற்றிற்குரிய அட்டவணைகளின் மீதிகளுடன் ஒப்பிட்ட போது ரூபா 13,725,421 ஆன வேறுபாடு காணப்பட்டது. | குறித்த வேறுபாட்டை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் மீதிகள், சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 24 ஆண்டுகளுக்க மேற்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருக்கும் ரூபா 15,462 ஆன தொங்கல் கணக்கு | மீதியை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் | கணக்கு மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

| | |
|---|---|
| மீதியை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக |

### 1.6.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 827,314 கூட்டுத்தொகையான 08 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 17,664,535 ஆன 07 பொறுப்பு விடயங்களுக்குரிய சொத்துப் பதிவேடு மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள், கோவகள் மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | மீதியை பதிவழிப்பதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | கணக்கு மீதிகளுக்குரிய ஆவணங்கள்/அட்டவணைகள் மற்றம் கோவைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்
**சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்ககளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 19(1)(xii) | அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ரத்தொட்டலோன்வீல் தோட்டம் என்ற பெயரிலான காணி அரச வங்கி ஒன்றுக்காக அடுத்து 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது | மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்றுக் கொண்டு விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு உடன்படிக்கையை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி | | | |
| (i) விதி 59 | அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய கணிப்பீடொன்றை நடாத்தி 60 ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் கைத்தொழில் மற்றும் வர்த்தக வியாபாரங்கள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு | 2023 ஆம் ஆண்டிற்காக அனுமதி பத்திர கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அனுமதி பத்திர கணிப்பீடு அறிக்கை தயாரிக்கப் பட்டுள்ளதாக. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணிப்பீட்டை நடாத்தி பட்டியலொன்றை மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்படவில்லை. | | |
| (ii) | விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்னும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருவதாக | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி 571(2) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 295,452 ஆன நிர்மாணப் பிடிகாசு விடுவிக்கப்பட்டு இருக்கவில்லை | தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2018 ஏப்ரல் திகதியின்றி மமா/உ.ம.ஆ சுற்றறிக்கை 2018/05 ஆம் இலக்க உடைய மத்திய மாகாண உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | பிரதான செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் நாளாந்த அடிப்படையில் (03 மாத அடிப்படையில்) ஆட்சேர்க்கப்பட்ட சுகாதார தொழிலாளர் ஒருவர் மற்றும் நீர் தொழிலாளர் ஒருவர் ஆகியோருக்காக2020 ஒக்டோபர் மாதம் முதல் 2022 திசெம்பர் வரை ரூபா 808,498 ஆன சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது | உள்ளூராட்சிமன்ற ஆணையாளரின் அங்கீகாரத்துக்காக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டுவரும் வருமானம் ரூபா 15,916,268ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 10,906,371 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,315,000 | 1,365,601 | 1,327,818 | 2,879,591 | 1,315,000 | 1,684,462 | 1,243,659 | 2,841,808 |
| (ii) | வாடகை | 4,519,050 | 5,121,628 | 5,556,153 | 3,521,187 | 4,480,800 | 4,306,724 | 3,634,526 | 3,955,712 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 970,000 | 1,018,450 | 1,017,750 | 406,385 | 950,000 | 607,722 | 607,722 | 405,685 |
| (iv) | ஏனைய வருமானம் | 8,000,000 | 6,807,310 | 8,343,330 | 10,814,335 | 8,150,000 | 26,252,719 | 28,347,844 | 12,350,355 |
| | | 14,804,050 | 14,312,989 | 16,245,051 | 17,621,498 | 14,895,800 | 32,851,627 | 33,833,751 | 19,553,560 |

### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | வீதவரி அலகொன்றில் ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையான 30 வீதவரி அலகுகளிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறுநிலுவை வீதவரி மீதி ரூபா 527,452ஆகும் | நிலுவை வீதவரி கட்டணங்களை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 21 விளம்பர பதாகைகளுக்குரிய ரூபா 30,600 ஆன கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை | 2023 இற்குரிய விளம்பர கட்டண கொடுப்பனவு தொடர்பாக அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டு அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 16,957,084 ஆக இருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாக | பெறவேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 17,516,186 ஆக இருந்தது. | எதிர்காலத்தில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஜுலை 08 ஆம் திகதி 2235/54 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கட்டளைகள்/ பிரமாணங்கள் 281 இன் பிரகாரம் அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் நீர் வழங்கல் சபையினால் கட்டிடம் ஒன்றும் நீர் சுத்திகரிப்பு கூடம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது | சட்ட ரீதியாக்கி 2023 இல் கட்டணங்கள் திருத்தத்தின் பிரகாரம் தண்டப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் கட்டளைகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் கெப் வண்டிய திருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றுக்கு அனுப்பி ரூபா 683,480 ஆன மதிப்பீடு ஒன்றை பெற்றுக்கொள்ளப்பட்டு இருந்த போதும் பொதுச் சபை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டும் மதிப்பீடு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு 08 மாத காலம் கடந்ததன் காரணமாக விலை மாற்றத்தின் பிரகாரம் சபைக்கு ரூபா 172,880 ஆன நிதி நட்டமொன்றை ஏற்க நேர்ந்திருந்தது. | குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் பெற்றுக்கொண்ட புதிய மதிப்பீட்டுக்காக ஆளுநரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | கால தாமதம் இன்றி செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பண்டார பொல ஈ நெசனல கணனி நிலையம் 2019 ஒக்டோபர் 25 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படாமை அதில் உள்ள கணனிகள் மற்றும் உபகரணங்களின் மற்றும் 61 அலுவலக உபகரண தொகுதிகள் விளைவற்றுக் காணப்படுவதுடன் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணினி பயிற்சியாளரை ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சொத்துக்கள் செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,103,000 கூட்டுப் பெறுமதியான 386.85 பேர்ச் அளவிலான 14 காணித் துண்டுகள் மற்றும் சுற்றளவு இனங்காணப்படாதிருந்த ரூபா 200,000 ஆன காணியொன்று வேலி எல்லை தயாரிக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | விரைவில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபை பயன்படுத்தும் ரூபா 1,724,744 ஆன 6 ஏக்கர் 1 ரூட் 22 பேர்ச் அளவிலான 12 காணித் துண்டுகளும் அளவினை இனங்காணாத 04 காணிகளும் ரத்தோட்டை பிரதேச செயலகம், காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் தனியார் உரித்தின் கீழ் காணப்படும் 78 காணிஎன் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த காணிகளின் உரித்தினை இனங்கண்டு சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | காணிகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 13 பதவிகளில் 29 வெற்றிடங்களும் ஒரு பதவிக்குரிய 3 மிகை உம் ˙ காணப்பட்டன. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரால் ஆட்சேர்ப்பு தொடர்பாக எதிர் வரும் நடவடிக்கைகளுக்காக தற்காலிகமாக இடை நிறுத்தி உள்ளதாக | வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 20 செலவின விடயங்களில் 45 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலும் 36 வருமான விடயங்களில் 45 சதவீதம் முதல் நூறு சதவீதத்தை மிகைத்த விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டிற்காக வரைவு பாதீட்டை தயாரிக்கும் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருமானம் மற்றும் செலவினம் சரியாக எதிர்வுகூறப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட வேண்டும்.. |